166

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE.

166

கோகலே தமிழ்வாசகம்

இரண்டாம் வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF ...
9- OCT 1933
MADRAS

EDITED BY
P. T. SREENIVASA IYENGAR.



V. S. VENKATARAMAN & CO,
PUBLISHERS, KUMBAKONAM.

TB
031,6 ...
N33
1?4222

OFFICE OF THE REGISTRAR
9-OCT 1933
MADRAS

கோகலே இரண்டாம் வாசகம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)

பதிப்பாசிரியர் :

பி. தி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

V. S. வெங்கடராமன் கம்பெனி,

பப்ளிஷர்ஸ் : . கும்பகோணம்.

பதிவு செய்தது] [விலை அணு 3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.
171222

DEDICATED TO THE CHILDREN of the MOTHERLAND

1186
494.81186

OFFICE OF THE REGISTRAR
9- OCT 1933
MADRAS

முன்னுரை

சென்னைச் சர்வகலா சங்கத்தின் இந்திய தேசச் சரித்திர ஆராய்ச்சியாளராய் விளங்கி, நமது தமிழ் நாட்டில் கல்வித்துறை பலவற்றிலும் ஈடுபட்டு மிகவும் உழைத்துப் பல நூல்கள் இயற்றிவந்தவராகிய ஸ்ரீமான் P. T. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள் தம் மனங்கனிந்த உதவியைக் கொண்டு கோகலே வாசகம் எனப் பெயரிய இப் பாட புத்தகங்கள் தொகுக்கப்பெற்றன.

நம் நாட்டு மக்களுக்கு இன்றியமையாத கல்வி அறிவு, உலக அறிவுகள் இளமை தொட்டே புகட்டப் பெறின், இவைகள் இளமனத்தில் பசுமரத்தாணி போல் நன்கு பதியக்கூடும். ஆகையால், இத்துணிவு பற்றி இளையோர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், தேசாபிமானம் முதலியன உண்டாவதற்கு ஏற்றபடி, சித்திரப் படங்களோடுங் கூடிய இனிய கதைகளும், பழையனவும் புதியனவுமான பாடல்களும், பல விஷயங்களைப் படிப்படியாக வருத்தங் காட்டாது சிறுகச் சிறுகப் போதிக்கும் பாகுபாடு பொருந்திய பாடங்களும், சாதுரியமாகப் பேசுந் திறனையளிக்கும் சம்பாஷணைகளும், தமிழ் வளமுறுத்தும் சொல்லமைதிகளோடும் கூடிய பொருட்டிறனும், நீதிபுகட்டும் பழமொழிகளும், கடின மொழிகளுக்குப்

பொருளும், இலக்கணப் பாடங்களும், பயிற்சிகளும், வியாச முறையை விருத்தி செய்வதற்குதவும் வினுக்களும், கதை சொல்லப் பழக்கும் முறையில் நின்ற கதைகளும் இக்கோகலே வாசகத்தில் இனிமையாகத் திகழ்ந்து விளங்குவனவாம். அன்றியும், இதன்கண் பழங்காலத்தவருடைய வரலாறு நீதி ஒழுக்கம் முதலியவைகளும், இடைக்காலத்தவர் தற்காலத்தவர்கள் தம் நற்செயலும் நம்மாணவர் மனத்தில் நன்கு வேரூன்றும் பொருட்டு நடித்துக் காட்டத்தகும் அபிநய மொழிகள் அபிநயப்பாட்டுகள் நிறைந்த நாடகங்களும் விரவியுள்ளன.

இவ்வாசகத்தைப் பதிப்பிக்கப் பலவிதத்திலும் உதவின பெங்களூர் செயிண்டு ஜோஸப் காலேஜ் தலைமைத் தமிழ் ஆசிரியர் திருவாளர் தொழுவூர்-வே. செங்கல்வராய முதலியார் அவர்களுக்கும், இதுவரையில் எமது பாடபுத்தகங்களை ஏற்று ஆதரித்து வந்த கல்வி அதிகாரிகள், கலாசாலைத் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபட்ட எமது கோகலே வாசகம் என்றும் எங்கும் இனிது பரவும்பொருட்டு எல்லாம் வல்ல இறைவனது அருளை இறைஞ்சி ஏத்துகின்றோம்.

V. S. வேங்கடராமன் கம்பேனி.

பொருளடக்கம்

பாடம்			பக்கம்
1-5.	மொழி வாக்கியங்கள்	...	7—15
6.	நிலாவை அழைத்தல்	...	16
7.	நமக்கு வேண்டியவர்கள்	...	16
8.	ஐங்குரவர் செய்நன்றி	...	19
9.	தினசரிக் கடமை	...	20
10.	பொது அறிவு	...	22
11.	கடவுள்	...	24
12.	கடவுள் துதி—காலைப் பாட்டு	...	26
13.	எலிப் பெண்	...	27
14.	கோயில்	...	31
15.	வீடு	...	33
16.	உலகநீதி வாக்கியங்கள் I	...	36
17.	கழுதையும் நாயும்	...	37
18.	மாடு	...	40
19.	பாப்பாப் பாட்டு	...	42
20.	குதிரை	...	43
21.	“ ஒன்றே செய்க ”	...	45
22.	காற்றும் சூரியனும்	...	46
23.	“ நான் ஓர் ஆறு ”	...	49

பாடம்		பக்கம்
24.	உலகநீதி வாக்கியங்கள் II ...	51
25.	நீரின் குணம் ...	52
26.	ஸ்ரீராமர் I ...	54
27.	விநோத விடுகதைகள் ...	56
28.	ஸ்ரீராமர் II ...	57
29.	கண்ணன் ...	60
30.	புளிய மரமும் தென்னை மரமும்	62
31.	பெற்றோரே தெய்வம் (நாடகம்)	65
32.	"எங்கள் நாடு" ...	69
33.	உலகநீதி வாக்கியங்கள் III ...	71
34.	பாட்டுக் கச்சேரி ...	72

கோகலே
இரண்டாம் வாசகம்

---

1. ஈரெழுத்து மொழி
வாக்கியங்கள்

இது ஒரு மணி பார்.
கண கண என மணி அடி.
இது தான் மணி ஓசை.
இதோ ! மணி ஓசை கேள்.
இது பூசை வேளை பார்.
ஆசை தீர மணி அடி.
சாமி முன் மணி அடி.
சாமி முன் துதி பாடு.
சாமி அடி முடி சூடு.
பூசை வேளை மணி அடி.

பழமொழி :—யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.

அர்த்தம் :—வேளை = நேரம். கணகண = மணியடிக்கும்போது உண்டாகும் சத்தம். ஓசை = சத்தம். துதி = புகழ்ந்து பாடும் பாட்டுகள். அடி = கால். முடி = தலை. சூடு = அணி.

கேள்விகள் :—உனக்குத் தெரிந்த வேறு இரண்டெழுத்துச் சொற்களைச் சொல். யாரைப் பூசை செய்வார்கள் ? எங்கே மணியடிப்பார்கள் ? எதற்காக மணியடிக்கிறார்கள்.

சித்திரம் :—மணியின் படம்.



2. மூன்றெழுத்து மொழி வாக்கியங்கள்

தம்பி, தென்னை மரம் பாராய்.
இதுவே நல்ல தென்னை மரம்.
தென்னை மரம் குளிர் நிழல் தரும்.
தென்னை மரம் வானில் ஓங்கி எழும்.
தென்னை மரம் தோப்பு அழகு தரும்.
தென்னை இனிய உணவு தரும்.

தென்னை மரம் அருகே கமுகு மரம் பாராய்.
நல்ல கமுகு மரம் வானில் ஓங்கி எழும்.
கமுகு மரம் தோப்பு அழகு தரும்.
கமுகு மரம் பச்சைப் பாக்குத் தரும்.
கமுகு மரம் தோப்பு நல்ல காற்று வீசும்.
கமுகு மரம் அருகே ஈச்ச மரம் பாராய்.
கமுகு மரம் நெட்டை; ஈச்ச மரம் குட்டை.
ஈச்ச மரம் இனிய பழம் தரும்.

பழமொழி :—தென்னை அடியால் உண்ட நீரை முடியால் தரும்.

அர்த்தம் :—பாராய் = பார். இதுவே = இதுதான். குளிர் நிழல் = குளிர்ந்த நிழல். வானில் = ஆகாசத்தில். ஓங்கி = உயர்ந்து. எழும் = நிற்கும். தோப்பு அழகு = தோப்புக்கு அழகு. இனிய = இனிமையான; தித்திப்பான. உணவு = ஆகாரம்.

கேள்விகள் :—(1) உனக்குத் தெரிந்த வேறு சில மூன்றெழுத்துச் சொற்களைச் சொல். (2) தென்னை மரம், பாக்கு மரம், ஈச்ச மரம் இவைகளின் வித்தியாசம் என்ன?

சித்திரம் :—தென்னை மரம்; கமுகு மரம்; ஈச்ச மரம்.



3. நான்கெழுத்து மொழி வாக்கியங்கள்

சிங்கம் காட்டில் வாழ்கிற மிருகம்.
சிங்கம் வளைந்த நகத்தை உடையது.
அதற்குப் பற்கள் உரமாய் உள்ளன.
சிங்கம் பல்லால் எலும்பைப் பொடியாகச் செய்யும்.
அதற்கு மேல்வாய் கீழ்வாய் வலுத்து உள்ளன.
சிங்கம் எதையும் பார்த்து அஞ்சாது.
அதற்குத் தைரியம் அதிகம்; பலமும் அதிகம்.
சிங்கம் மிகுந்த துரிதம் உள்ளது.
சிங்கம், நீளமான வாலினாலே, மனிதனை அடித்து வீழ்த்த வல்லது.
யானைக்கு மிகவும் பயத்தைத் தருவது சிங்கமே!
சிங்கம் யானையைக் கண்டால் பாய்ந்து கொல்லும்.

சிங்கம் காட்டின் அரசன்.
ஆனாலும், சிங்கம் மிகுந்த தூக்கம் கொள்ளும்.
சிங்கம் மிகவும் சோம்பல் கொண்டது.
சிங்கம் ஆவலாக இறைச்சி தின்னும்.
சிங்கம் பசித்த வேளையில் எதையும் கொல்லும்;
பசியாத வேளையில் எதையும் கொல்லாது.

பழமொழிகள் ;—(1) அனந்தல் ஆடேல். (2) சோம்பித் திரியேல். (3) தக்கோன் எனத் திரி. (4) நேர்பட ஒழுகு.

அர்த்தம் :—உரமாய்=பலமாய். வலுத்து=பலமாய். அஞ்சாது=பயப்படாது. நிரம்ப=நிறைய. துரிதம்=வேகம். வல்லது=பலமுடையது. ஆவல்=ஆசை. இறைச்சி=மாமிசம். அனந்தல்=தூக்கம். தக்கோன்=யோக்கியன். நேர்பட=செவ்வையாக. ஒழுகு=நட.

கேள்விகள் :—(1) உனக்குத் தெரிந்த வேறு சில நான்கெழுத்துச் சொற்களைச் சொல். (2) மிருகம் என்றால் என்ன? (3) சிங்கத்தின் குணங்களை எல்லாம் சொல். (4) காட்டு அரசன் யார்? ஏன்?

சித்திரம் :—யானைத்தலை; சிங்கமுகம்.

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு :—இப்பாடத்திலும் இனி வரும் பாடங்களிலும் உள்ள பழமொழிகளைப் பாடத்தை யொட்டிப் பிள்ளைகளுக்குப் போதிக்கவும்.

4. ஐந்தெழுத்து மொழி

வாக்கியங்கள்

பிள்ளைகள் பாடங்களை நன்ருகப் படித்தால் ஆசிரியர் மெச்சுவார்.

பாடத்தைப் படிக்கிற பிள்ளைகள் நல்லவர். படிக்காத பிள்ளைகள் மூடர்கள்.

மூடர்களை ஒருவரும் விரும்பார். கருத்தாய்ப் படிக்கிற பிள்ளைகளை எல்லாரும் புகழ்வார்.

செம்மையாய் வாசிக்கிற மாணுக்கன் ஆசிரியரை மதிப்பான்; அவருடைய போதனைகளைக் கொள்ளுவான்.

வாத்தியாரை மதிக்காத மாணுக்கன் அறிவில்லாக் குறும்பன்.

வாத்தியார் சொற்படியே நடக்கிற மாணுக்கன் யோக்கியன்; அவன்தான் அடக்கம் உடையவன். அடக்கம் உடையவனே சிறந்தவன் ஆவான்.

அடக்கம் அற்றவனை எல்லாரும் இகழ்வார். செம்மையாக வாசித்தோன் வித்துவான் எனப் படுவான்.

வித்துவானை அரசரும் மெச்சுவார். ஆகையினுலே பிள்ளைகள் படிப்பது சிறந்தது.

பழமொழிகள் :—(1) இளமையில் கல். (2) ஓதுவது ஒழியேல். (3) வித்தை விரும்பு.

அர்த்தம் :—ஆசிரியர் = உபாத்தியாயர். விரும்பார் = ஆசைப்படார். புகழ்வார் = மெச்சுவார். கருத்தாய் = கவனமாய். போதனைகள் = சொல்லிக் கொடுக்கப்பட்டவைகள். குறும்பர் = துஷ்டர். அற்றவன் = இல்லாதவன். வித்துவான் = நன்றாய் வாசித்தவன். இளமை = சிறுவயது. ஓதுவது = படிப்பது. ஒழியேல் = விடாதே.

கேள்விகள் :—(1) உனக்குத் தெரிந்த வேறு சில ஐந்தெழுத்துச் சொற்களைச் சொல். (2) மாணாக்கர், மூடர்கள், ஆசிரியர், குறும்பர், யோக்கியன், வித்துவான், அரசர் இவர்கள் யார்? (3) படிக்கிறவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? (4) அடக்கம் என்பது யாது? அதனால் நமக்கு உண்டாகும் நன்மை யாது?

சித்திரம் :—புஸ்தகம்.

5. பலவகை மொழி வாக்கியங்கள்

நீ படத்தில் பார்ப்பது குரங்கு அல்லவா?

அது என்ன செய்கிறது? அது ஒரு கொம்பைப் பிடித்திருக்கிறது.

குரங்கு மனிதனைப் போலவே இருக்கிறது.

அது எல்லா வேலையும் செய்யும்.

குரங்கு மரத்துக்கு மரம் தாவும்.

குரங்குகள் காட்டில் கூட்டமாய்த் திரியும்.

சில குரங்குகள் நாடுகளிலும் வாழ்கின்றன.

நாம் கற்றுக் கொடுப்பதை அது ஆவலாய்க் கற்றுக் கொள்ளும்.

குரங்கு காய், கனி, கிழங்குகளைத் தின்னும், அது தோட்டங்களில் பழம் முதலியவைகளைத் திருடும்.

அதை நாம் தொந்தரவு செய்யக் கூடாது.

நாம் தொந்தரவு செய்தால் நம்மை அது கடிக்கும்.

அது துடுக்கு வேலைகள் அதிகம் செய்யும்.

குரங்கு மிகவும் வேடிக்கையாய் ஆடும்.

கறுத்த குரங்கு மிகவும் பொல்லாதது.

குரங்கு குட்டி போட்டுப் பால் கொடுக்கும்.

குரங்குக் குட்டி தாய் வயிற்றைக் கெட்டியாய்க் கட்டிக் கொள்ளும்.

குரங்கு தாண்டும் போது குட்டி விழாமல் இருக்கும்.

பழமொழிகள் :—(1) கெடுப்பது ஒழி. (2) கொள்ளை விரும்பேல். (3) குரங்கு கையில் பூமாலை அகப்பட்டதுபோல்.

அர்த்தம் :—தாவும்=தாண்டும். எளிதில்=இலேசாய். கனி=பழம். துடுக்கு=குறும்பு.

கேள்விகள் :—(1) குரங்கு எங்கே, எப்படி வாழும்? (2) குரங்கின் குணம் என்ன? (3) அது என்ன தின்னும்? (4) எந்தக் குரங்கு வெகு பொல்லாதது? (5) குரங்குக் குட்டி என்ன செய்யும்?

சித்திரம் :—பூ மாலை.

6. நிலாவை அழைத்தல்

அம்புலிமானே வா வா
ஆடவே நீ யிங்கு வா வா
கொம்பில் தேனே வா வா
கூடவே ஓடி வா வா
சங்கிலி தாரேன் வா வா
சந்தனம் பூச வா வா
கட்டிக் கரும்பே வா வா
வட்டத் தட்டே வா வா
கான நிலாவே வா வா
வான மலரே வா வா
வெண்ணெய்க் கட்டியே வா வா
கண்ணன் கையிலே வா வா

---

7. நமக்கு வேண்டியவர்கள்

1. தாயார் நம்மைப் பெற்ருர். நம் குழந்தைப் பருவத்தில், அவர் நமக்குப் பால் ஊட்டினுர். பின்பு, கஞ்சி முதலியன வார்த்துவந்தார். இப்போது சுவையான உணவுகளைத் தருகிருர்; நம்மை எப்போதும் அன்பாக வளர்த்து வருகிருர். முதலில் நமக்குப் பேசக் கற்பித்தவரும் தாயாரே.

2. தகப்பனார் நம்மைக் காப்பாற்றுகிறார்.

நமக்காக அவர் நாள் முழுதும் வேலை செய்கிறார். அவரே நமக்குத் துணியும், சாப்பாடும் தருகிறார் ; நாம் நன்றாய்ப் பேசவும், ஒழுங்காய் நடக்கவும் கற்பிக்கிறார். நம்மைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறவரும் தகப்பனாரே.

3. தமையனார் நம்மை ஆதரிக்கிறார். தகப்பனாரைப்போல் நம்மிடம் அன்பாய் இருப்பவர் தமையனாரே. தகப்பனாருக்கு அடுத்தபடி அவர் நமக்கு உதவி செய்கிறார். நமக்கு நல்ல துணையும் தமையனாரே.

4. உபாத்தியாயர் நமக்குக் கல்வி கற்பிக்கிறார்.



அவர் நமக்கு நீதி கற்பிக்கிறார். அவர் நமது அறிவை வளர்க்கிறார். அடக்கம் மரியாதை முதலிய நல்ல ஒழுக்கங்களை அவர் நமக்குப் போதிக்கிறார். கற்றபடி நடக்க நம்மைப் பழக்குபவரும் உபாத்தியாயரே.

5. அரசர் நம்மை ஆள்கிருர். அவர் நம்மிடம் அன்பாய் இருக்கிருர். நாட்டில் அவர் நீதி வழங்குகிருர். பகைவரும், திருடரும் துன்பம் செய்யாதபடி நம்மைக் காப்பாற்றுகிறவர் அரசரே.

6. தாயார், தகப்பனுர், தமையனுர், உபாத்தியாயர், அரசர் ஆகிய ஐந்து பேரும் நீதி கற்பிக்கிருர்கள். அவர்கள் கடவுளை வணங்கவும் கற்பிக்கிருர்கள். நம்முடைய அறிவையும் வளர்க்கிருர்கள். ஆகையால், அவர்கள் நம்முடைய குருமார்கள். அவர்களுக்கு ஐங்குரவர் என்று பெயர்.

பழமொழிகள் :—(1) தந்தை தாய்ப்பேண். (2) பெரியாரைத் துணைக்கொள்.

அர்த்தம்:—சுவையான = ருசியான. உணவு = சாப்பாடு. அன்பாக = ஆசையாக. ஆதரிக்கிருர் = உதவி செய்கிருர். நீதி = நியாயம். ஒழுக்கம் = நடக்கை. குரு = அறிவு கற்பிக்கிறவர். ஐங்குரவர் = ஐந்து பெரியோர்கள். பேண் = காப்பாற்று.

கேள்விகள் :—(1) நமது தாய், தகப்பன், அண்ணன், அரசன், உபாத்தியாயர் இவர்கள் செய்யும் நன்மைகளைத் தனித்தனியாகச் சொல். (2) எவருக்கு ஐங்குரவர் என்று பெயர்? ஏன்? (3) ஐங்குரவருக்கு நாம் செய்ய வேண்டியது யாது? (4) இன்னும் வேறு சுற்றத்தார் பெயர்களைச் சொல்.

சித்திரம் :—முக்காலி ; நாற்காலி.

8. ஐங்குரவர் செய்நன்றி

(மெட்டு :—சங்கரனே சங்கரனே.)

1. அன்னை போல் அன்பாக
   ஆதரிக்க யாருண்டு ;
   தந்தைபோல் நலமான
   கல்வி தர யாருண்டு.

2. அண்ணன் போல் அண்டையிலே
   துணையாவார் யாருண்டு ;
   ஆசான்போல் அன்பாக
   அறிவுதர யாருண்டு.

3. மன்னன்போல் யாவரையும்
   பாலிக்க யாருண்டு ;
   உன்னிப்பார் ஐங்குரவர்
   நலமெல்லாம் உன்னுள்ளே.

பழமொழிகள் :— 1. நன்றி மறவேல். 2. ஐங்குரவர் ஆணை மறுத்தல் அரிதே.

அர்த்தம் :—அன்னை=தாய். ஆதரி=காப்பாற்று. நலம்=நன்மை. அண்டை=பக்கம். துணையாவார்=துணையாகிறவர்கள். ஆசான்=உபாத்தியாயர். மன்னன்=அரசன். பாலிக்க=காப்பாற்ற. உன்னிப்பார்=யோசித்துப் பார்.

9. தினசரிக் கடமை

1. பிள்ளாய்! நீ சூரியன் வருமுன்னே எழுந்திரு. உடனே கடவுளை வணங்கு. பின்பு, ஊற்றை போகப் பற்களைத் துலக்கு. முகத்தைத் தேய்த்துக்கழுவு. கண், மூக்கு, காது இவைகளில் உள்ள அழுக்கைப் போக்கு. கை கால்களை நன்றாக அலம்பு.

2. மறுபடியும் கடவுளை வணங்கு. பின்பு பெரியோர்கள் உனக்குக் கொடுக்கும் உணவை திருப்தியுடன் சாப்பிடு. பின்பு, ஓரிடத்தில் அமைதியாய் இருந்து பாடத்தைப் படி.

3. படித்தவுடன் வீட்டு வேலை இருந்தால் செய். அப்புறம் உடம்பு தேய்த்து அழுக்கில்லாத நீரில் குளி. நாள்தோறும் துணியைத் தோய்த்துக் கட்டு. சுத்தமான நல்ல உணவைச் சாப்பிடு. சாப்பிடுவதற்குமுன் கடவுளை வணங்கு. சாப்பிடுவதை நன்றாக மென்று தின்னு.

4. தினமும் வேளை தவருமல் பள்ளிக்கூடம் போ. அங்கே வீண்காலம் போக்காமல் படி. மாலை வேளையில் நல்ல காற்று உள்ள மைதானத்தில் விளையாடு. கெட்ட பிள்ளைகளுடன் சேராதே. விளையாட்டுக்குப் பின் முகம், கை, கால்களைச் சுத்தம் செய்.

5. விளக்கு ஏற்றின பின்பு கடவுளை வணங்கு. மறுநாட் பாடங்களை நன்ருகப் படி. இரவில் சாப்பிட்டபின் வீட்டிற்குள்ளே உலாவு. படுப்பதற்கு முன்பு கடவுளுக்கு நன்றி செலுத்து. பின்பு, நன்ருய்த் தூங்கு.

பழமொழிகள் :—(1)வைகறைத் துயில் எழு. (2) செய்வன திருந்தச் செய். (3) ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்.

அர்த்தம் :—வணங்கு=கும்பிடு. போக்கு=போகச் செய். அலம்பு=கழுவு. திருப்தி=போதும் என்று இருப்பது. அமைதியாய்=சாந்தமாய். வைகறை=விடியற் காலம். துயில்=தூக்கம். திருந்த=திருத்தமாக. ஓதாமல்= வாசியாமல்.

கேள்விகள் :—(1) காலை வேளையில் செய்ய வேண்டிய கடமைகள் யாவை? (2) சாப்பிடுவதற்கு முன் செய்ய வேண்டிய வேலைகள் யாவை? (3) மென்று சாப்பிடவேண்டிய காரணம் யாது? (4) காலையில் சாப்பிட்டபின்பு செய்யவேண்டியது என்ன? (5) விளையாட்டுக்கு உரிய விதி யாது? (6) இரவில் செய்ய வேண்டியது யாது?

சித்திரம் :—சூரியன் ; விளக்கு.



10. பொது அறிவு

1. இந்தப் படத்தைப் பார்! தூரத்தில், அதோ! உயர்ந்து காணப்படுவது யாது? அது மலை. அதிலிருந்து ஓடி வருவதே ஆறு.

2. அந்த ஆற்றோரத்தில் என்னுடைய தோட்டம் இருக்கிறது. தோட்டத்தில் உள்ளது என் வீடு. வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள கிணற்றில் இருப்பது ஏற்றம்.

3. ஏற்றத்தில் ஒரு துலாக்கோல் தொங்குகிறது. துலாக்கோலில் இரும்புச் சால் கட்டியிருக்கிறது. சாலில் தண்ணீர் மொள்ளலாம். மொண்ட தண்ணீரைத் தோட்டத்திற்குப் பாய்ச்சலாம்.

4. கிணற்றின் ஓரத்தில் வாழை மரம் நிற்கிறது. வாழை மரத்தில் குலை பழுத்து இருக்கிறது. அந்தக் குலையில் பதினைந்து வாழைச் சீப்புகள் இருக்கின்றன. ஒரு சீப்பில் சுமார் பத்துப் பழங்கள் இருக்கும்.

5. என்னுடைய மாமனுக்கும் ஸ்ரீரங்கத்தில் ஒரு தோட்டம் உண்டு. அங்கே, ஸ்ரீரங்கநாதர் கோயில் இருக்கிறது. ஸ்ரீரங்கம் தக்ஷிணத்தில் ஒரு நல்ல ஊர். அது காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் இருக்கிறது. காவிரி நதி குடகு மலையில் உற்பத்தியாகிறது. அங்கிருந்து ஓடிக் கிழக்குச் சமுத்திரத்தில் விழுகிறது. அந்தச் சமுத்திரத்திற்கு வங்காளக் குடாக் கடல் என்று பெயர்.

6. தக்ஷிணம் என்பது இந்தியாவினுடைய தெற்கில் இருக்கும் ஒரு பாகம். இந்தியா நம்முடைய தேசம். இந்தியாவினுடைய வடக்கில் இமயமலையைக் காணலாம். இமயமலையில் கங்கையாறு உண்டாகிறது. இந்தியாவிற்குத் தெற்கே கடலில் இலங்கைத்தீவு இருக்கிறது. தீவு என்பது நான்கு புறமும் நீரால் சூழப்பட்டிருக்கும் நிலமாம்.

பழமொழி :—இறைக்கும் கிணறு சுரக்கும்.

அர்த்தம் :—மலை=மண்ணும், கல்லாலும் உயர்ந்து இருக்கும் மேடு. ஓரம்=பக்கம். உள்ளது=இருப்பது. சால்=நீர் மொள்ளும் பாண்டம். இமயமலை=பனிமலை.

கேள்விகள் :—(1) மலை, ஆறு இவைகள் யாவை? (2) உனக்குத் தெரிந்த மலை, ஆறுகளின் பெயர்களைச்

சொல். (3) ஏற்றத்தின் உபயோகம் யாது? எப்படி? (4) வாழைமரத்தால் நமக்கு என்ன பலன்? (5) குலை, சீப்பு என்றால் என்ன? (6) ஸ்ரீரங்கம்; தக்ஷிணம்; காவிரி; இவைகளைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல். (7) நம்முடைய தேசம் எது? (8) உனக்குத் தெரிந்த மலை, ஆறுகளைச் சொல். (9) தீவு என்பது யாது?

சித்திரம்:—வாழை மரம்; கிணறு.

11. கடவுள்

1. கடவுள் ஒருவரே. அவர் எங்கும் இருக்கிறார். நம்மை உண்டாக்கினவரும் அவரே. அவர்தாம் உலகத்தையும் படைத்தார். அதில் உள்ள மலைகள், ஆறுகள், கடல்கள் முதலியவைகளையும் அவர் உண்டாக்கினார்.



2. வானத்தில் உள்ள சூரியனையும், சந்திரனையும், நக்ஷத்திரங்களையும் கடவுள்தாம் படைத்தார். பகலில் சூரியனால் வெளிச்சம் பெறுகிறோம். இரவில் சில காலங்களில் சந்திரனால் நல்ல வெளிச்சம் பெறுகின்றோம். மற்றக் காலங்களில் நக்ஷத்திரங்களால் கொஞ்சம்

வெளிச்சம் உண்டாகிறது. இவைகள் ஆகாயத்தில் எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றன!

3. இவ்வளவு பெரிய உலகத்திற்குப் பெரிய விளக்கு ஏற்ற நம்மால் முடியுமா? அல்லது, பல



சிறு விளக்குகள்தாம் ஏற்றக் கூடுமா? வெளிச்சம் தரும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களைக் கடவுள் உண்டாக்காவிட்டால் நாம் எவ்வளவு துன்பப் படுவோம்! ஆகையால், நாம் கடவுளை மிகவும் நன்றியோடு வணங்கவேண்டும்.

பழமொழி :—தெய்வம் இகழேல்.

அர்த்தம் :—படைத்தார்=உண்டாக்கினர். துன்பம்= கஷ்டம், துக்கம். நேர்த்தியாக=அழகாக. மறவேல்= மறக்காதே. தெய்வம்=கடவுள். இகழேல்=இகழாதே; பரிகசிக்காதே.

கேள்விகள் :—(1) கடவுள் எங்கிருக்கிறார்? (2) அவர் உண்டாக்கியவைகள் எவை? (3) இரவில் நமக்கு வெளிச்சம் கொடுப்பவை எவை? (4) நாம் கடவுளுக்குச் செய்ய வேண்டியது யாது? ஏன்? (5) இப்பாடத்தால் நீ அறிவது யாது?

சித்திரம் :—சந்திரன்.

[library stamp]

12. கடவுள் துதி—காலைப் பாட்டு

பொழுது விடிந்தது பொற்கோழி
கூவிற்று
பொன்னான தேவரே வாரும்
மின்னார் முதலோரே வாரும். (1)

காகங் கரைந்தது காலையும் ஆயிற்று
கண்ணான நாதரே வாரும்
பண்ணான மொழியரே வாரும். (2)

சேவல் ஒலித்தது சின்னம் பிடித்தனர்
தேவர்கள் தேவரே வாரும்
ஆவி முதல்வரே வாரும். (3)

சூரியன் தோன்றினன் தொண்டர்கள் சூழ்ந்தனர்
சோர சங்காரரே வாரும்
வீரசிங் காரரே வாரும். (4)

பக்தர்கள் சூழ்ந்தனர் பாடல் பயின்றனர்
பன்மலர்த் தோளரே வாரும்
பொன்மலர்த் தாளரே வாரும். (5)

என்னையும் ஆளவே என்னுயிர் நாதரே
இன்பமா யென்னிடம் வாரும்
அன்பதா யென்னிடம் வாரும். (6)

பழமொழிகள் :—(1) கடவுளைப் போற்றி வாழ். (2) கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.

அர்த்தம் :—பொற்கோழி = அழகான கோழி. மின்னார் = பிரகாசமுடைய. கரைந்தது = கூவிற்று. பண் = இராகம். மொழியர் = சொல்லுடையவர். ஒலித்தது = கூவிற்று சின்னம் = சங்கு, எக்காளம். ஆவி = உயிர். தோன்றினன் =

காணப்பட்டனன். தொண்டர்கள்=பக்தர்கள். சோரசங்காரர்=திருடரை அழிப்பவர். சிங்காரர்=அழகுடையவர். பயின்றனர்=சொல்லினர். பன்மலர்=அநேக பூக்கள். தாளர்=பாதமுடையவர்.

சித்திரம் :—கோழி.

13. எலிப் பெண்

ஒரு காட்டில் ஒரு முனிவர் இருந்தார். அவர் தினந்தோறும் தவம் செய்துகொண்டு இருப்பார்.

ஒரு நாள் ஒரு பருந்து, ஒரு பெண் எலியைப் பிடித்தது. அது அந்த எலியைத் தூக்கிக் கொண்டு மேலே பறந்தது. அது முனிவர் இருந்த இடத்தின் அருகில் ஒரு மரத்தில் வந்து உட்கார்ந்தது. அப்போது ஒரு வேடன் அங்கே வந்தான். அவனைக் கண்டு பருந்து பயந்தது. அது எலியைக் கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டது.

முனிவர் கீழே விழுந்த எலியைப் பார்த்தார்; அதன் மேல் இரக்கம் கொண்டார். அவர் அதை ஒரு அழகான பெண்ணாகச் செய்தார். அவர் அந்த எலிப் பெண்ணை ஒரு பலசாலிக்குக் கலியாணம் பண்ணிக்கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.

அவர் சூரியனைப் பார்த்து, "சூரியா! நீ தான் பலசாலி! நீ இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்," என்றார். அதற்குச் சூரியன், "ஐயா! எனக்குப் பலமே இல்லை; என்னைப் பார்க்கிலும் மேகந்தான் பலசாலி," என்றது.



அவர் மேகத்தைப் பார்த்து, "மேகமே! உன்னைப்போன்ற பலசாலி ஒருவரும் இல்லை. நீ இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொள்," என்றார். அதற்கு மேகம், "ஐயா! எனக்குப் பலமே இல்லை! என்னைப் பார்க்கிலும் காற்றே பலசாலி," என்றது.

முனிவர் காற்றைப் பார்த்து, "காற்றே! நீ தான் பலசாலி; நீ இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்," என்றார். அதற்குக் காற்று, "ஐயா! நான் பலசாலியில்லை; என்னைப் பார்க்கிலும் மலைதான் பலசாலி," என்றது.



முனிவர் மலையைப் பார்த்து, " அதிக பலமுள்ள மலையே! நீ இந்தப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள் " என்றார். அதற்கு அந்த மலை " ஐயா! நான் பலசாலி இல்லை. என்னைப் பார்க்கிலும் என் வயிற்றைக் குடையும் எலிதான் பலசாலி " என்றது.

முனிவர் எலியைப் பார்த்து, " திறமை உள்ள எலியே! நீ இவளைக் கலியாணம் பண்ணிக்கொள்" என்றார். அதற்கு அந்த எலி, " ஐயா! நான் வாழும் வீட்டுக்குள் இவள் வந்தால் இவளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறேன் " என்றது.

"உன் வீடு எங்கே"? என்று முனிவர் கேட்டார். எலி தன் வளையைக் காட்டியது. அதைக் கண்ட முனிவர், "எலியைக் கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமானால் இவளும் எலியாகத்தான் இருக்கவேண்டும்" என்றார். உடனே அவளை முன்போலவே எலியாக்கினார். அப்போது அந்த ஆண் எலி அதைக் கலியாணம் பண்ணிக்கொண்டது.

எலிக்கும் எலிக்கும் [கலியாணம்
நாட்டில் எல்லாம் ஊர் [கோலம்
நாட்டு எலிகள் காட் [டின் எலிகள்
கூட்டமாகக் கூடிவர
கொட்டு மேளம் [முழங்கி வர
எலிக்கும் எலிக்கும் [கலியாணம்.

பழமொழி :—இனத்தை இனம் சேரும்

அர்த்தம் :—தவம்=கடவுளை நினைத்துக் கொண்டேயிருப்பது. முனிவர்=எப்பொழுதும் கடவுளையே நினைத்துக்கொண்டு காட்டில் இருப்பவர். பலசாலி=பலம் உள்ளவன். திறம்=பலம். வாழும்=குடியிருக்கும். வளை=பூமிக்குள் பிராணிகள் குடைந்து செய்கிற துவாரம்.

கேள்விகள் :—(1) முனிவர் எலியை ஏன் பெண்ணாக்கினார்? (2) மலையைக் காட்டிலும் எது பெரியது? எப்படி? (3) முனிவர் எலியைப் பார்த்துப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ளும்படி சொன்னதற்கு எலி என்ன பதில் சொல்லிற்று? (4) ஏன் அந்தப் பெண்ணை மறுபடியும் எலியாக்கினார்?

சித்திரம் :—எலிகளின் கலியாண ஊர்கோலம்.



14. கோயில்

1. கடவுள் நம்மை உண்டாக்கிக் காப்பாற்றுகிருர். நாம் அவரை வணங்கவேண்டியது அவசியம் அல்லவா? ஆகையால்தான் நமது பெரியோர்கள் கோயில்களை ஏற்படுத்தி யிருக்கிருர்கள்.

2. கோயில் என்ருல் கடவுள் இருக்கும் இடம். ஆனுல், மற்ற இடங்களில் கடவுள் இல்லையோ? இருக்கிருர். அவர் எங்கும் இருக்கிருர். இருந்தாலும், நாம் நமது கண்ணுல் அவரைப் பார்க்கமுடியாது. ஆகையால், நாம் சீக்கிரத்தில் அவரை மறந்து விடுவோம். ஆனுல் நாம் அவரை மறக்கக்கூடாது.

3. தூரதேசத்தில் இருக்கும் நமது பந்துக்களை நாம் மறக்காமல் இருக்க என்ன செய்கிறோம்? புகைப்படம் (போடோ) எடுக்கிறோம் அல்லவா? அப்படியே, கடவுளை மறக்காமலிருக்க அவர்போல் ஒரு விக்கிரகம் செய்து ஓர் இடத்தில் வைக்கிறோம். அந்த இடம்தான் கோயில்.

4. அந்த விக்கிரகத்தை வீட்டில் வைத்துக் கொள்ளக்கூடாதோ? கூடும். ஆனால், சிலவேளை நம்முடைய வேலை மும்முரத்தில் கடவுளை வணங்க மறந்து விடுவோம். கோயில் பெரிய கட்டடம். ஆகையால், அதைப் பார்க்கும்போதெல்லாம் நமக்கு அவரைப்பற்றி ஞாபகம்வரும்.

5. மேலும், கோயிலுக்குப் போகவேண்டும் என்று ஓர் ஏற்பாடும் இருக்கும். அங்கே பல திருவிழாக்கள் நடைபெறும். திருவிழாக்களில் தேர்த் திருவிழாவே சிறந்தது. அது மிகவும் அழகாக இருக்கும். அவைகளை எல்லாம் நாம் பார்க்கப் போவோம். அப்பொழுதும் கடவுளை நினைப்போம். ஆகையால், நமக்குக் கோயில் அவசியமே.

பழமொழிகள் :—(1) கோயிலுக்குப்போனால் குறைதீரும். (2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று. (3) கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்.

அர்த்தம் :—விக்கிரகம் = கடவுளைப்போல் செய்த உருவம். திருவிழா = திருநாள்; உற்சவம். தீரும் = நீங்கும். ஆலயம் = கோயில். சாலவும் = மிகவும். நன்று = நல்லது.

கேள்விகள் :—(1) கோயில்; விக்கிரகம்; இவைகள் யாவை? (2) கோயிலாலும், விக்கிரகத்தாலும் நமக்கு யாது பலன்? (3) திருவிழாக்கள் நடக்கும் காரணம் யாது? (4) எந்தத் திருவிழா மிக அழகாக இருக்கும்?



15. வீடு

1. நாம் வெயிலில் காயாமலும், மழையில் நனையாமலும், பனியிலும் குளிரிலும் வருந்தாமலும், நமது பொருளைத் திருடர் கொண்டு போகாமலும் இருக்க நமக்கு ஒரு வீடு வேண்டும்.

2. வீடுகளில் பலவிதம் உண்டு. குடிசைகளிலும், ஓலைக்கூரை வேய்ந்த மண் சுவர் வீடுகளிலும் எளியவர்கள் வசிக்கிறார்கள். சிறிது செல்வம் உள்ளவர்கள் செங்கல் சுவரும் ஓட்டுக் கூரையும் உடைய வீடுகளைக் கட்டிக் கொள்ளுகிறார்கள். மிகவும் பணம் உள்ளவர்கள் மேல் மாடி உள்ள பெரிய வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். தோட்டங்களிலுள்ள பங்களா வீடு

களும், துணியால் அமைக்கப்பட்ட கூடாரங்களும் வெயில் காலத்தில் சுகமாய்க் குடியிருக்க உபயோகமானவை.

3. சாதாரண வீடுகளின் முன் பக்கத்தில் வாசற்படியும், திண்ணையும் இருக்கும். வாசற்படியைக் கடந்தவுடன் தலைக்கடைவழியும், அதற்கு அப்பால் சுற்றிலும் தாழ்வாரம் உள்ள முற்றமும் இருக்கும். முன் தாழ்வாரத்தின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரிய அறைகள் உண்டு. ஒன்று படுக்கை அறை, மற்றொன்று புதிதாக வருபவர்கள் தங்கும் அறை. பக்கத்துத் தாழ்வாரங்களை அடுத்து ஒன்று அல்லது இரண்டு நீண்ட கூடங்கள் இருக்கும். எதிரிலுள்ள தாழ்வாரத்தில் சமையல் அறை, குளிக்கும் அறை, உக்கிராண அறை முதலியவைகள் இருக்கின்றன.

4. வீட்டின் பின் பக்கத்திற்குப் போகப் புறக்கடை வழி ஒன்று உண்டு. பின்புறத்தில் கிணறும், மாட்டுக் கொட்டிலும், காய்கறித் தோட்டமும் இருக்கும். ஒரு பக்கத்தில் மாட்டுக் காகவைக்கோல்போர் அடைத்துவைத்திருக்கும்.

5. வீட்டில் நல்ல காற்றும், வெளிச்சமும் வர ஜன்னல்கள் வைக்கிறார்கள். வீட்டில் கழிக்கப்பட்ட சாக்கடை நீரையும், குப்பையையும், சாணியையும் அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற ஏற்பாடுகளும், இன்னும் வேண்டிய வசதிகளும் இருக்கும். நோய் வராமல் தடுப்பதற்கு வீட்டையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைக்க வேண்டும்.

(1) செங்கல் சுவர் உயர
கதவு சன்னல் தாம் அமைய
உத்தரமும் வரிச்சுகளும்
அழகாக மேலமைய (நானமைந்தேன்
பாராயோ)

(2) சுண்ணும்புச் சுவர் பொருந்த
கூரைமேலே ஓடு மிட
நாலுபேர் நடமாட
நாலாறு குழந்தையோட (நானமைந்
தேன் பாராயோ)

(3) அங்கு மிங்கும் விளையாட
அழகான வீடாக
நானமைந்தேன் பாராயோ!
என் கதையைக் கேளாயோ!

பழமொழி:—சிறுகக் கட்டிப் பெருக வாழ்.

அர்த்தம்:—வேய்ந்த=மூடிய. எளியவர்=ஏழைகள். மாடி=மெத்தை வீடு. அமைக்கப்பட்ட=செய்யப்பட்ட. முற்றம்=வீட்டின் நடுவிலுள்ள திறந்த பாகம். உக்கிராணம்=சாமான்கள் சேர்த்துவைக்கு மிடம். வரிச்சு=கூரையின்மேல் ஓடுகளைத் தாங்க நீளமாய் அமைக்கும் நீண்ட மரக்கொம்புகள். பொருந்த=சேர. நடமாட=திரிய. நாலாறு=நாலு அல்லது ஆறு.

கேள்விகள்:—(1) வீடு நமக்கு எவ்விதங்களில் உபயோகப்படுகிறது? (2) எத்தனை வகை வீடுகள் உனக்குத் தெரியும்? (3) சாதாரண வீடு இருக்கும் நிலைமையைப்பற்றி விவரித்துச் சொல். (4) வீட்டின் முக்கிய பாகங்கள் எவை? (5) நோய் வராமல் தடுக்க வீட்டைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய ஏற்பாடுகள் எவை?

சித்திரம்.—வீடு.

16. உலகநீதி வாக்கியங்கள் I

1. மறக்கக் கூடாதவை. (ஐந்து)

மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
செய்த நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்
[டாம்.

2. போகக்கூடாத இடம். (நான்கு)

அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம். [ம்.
பொருவார்தம்போர்க்களத்தில் போக வேண்டா
போகாத இடந்தனிலே போக வேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.

3. சேரக் கூடாதவை. (இரண்டு)

சினத்திருந்தார் வாசல் வழி சேர வேண்டாம்.
சேராத இடந்தனிலே சேர வேண்டாம்.

4. பேசக் கூடாதவை. (இரண்டு)

கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்.
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்.

அர்த்தம் :—(1) மாதா=தாய். நன்றி=உபகாரம். மூத்தோர்=பெரியோர். (2) அஞ்சாமல்=பயப்படாமல். தனிவழி=வழியில் ஒன்றியாய். பொருவார்=யுத்தம் செய்கிறவர்கள். போர்க்களம்=சண்டை செய்யும் இடம். (3) சினத்திருந்தார்=கோபித்திருந்தவர்கள். (4) கணக் கழிவை=தப்புக்கணக்கை. கொற்றவன்=அரசன். எதிர் மாறு=விரோதமாய்த் தடுத்துப் பேசுதல்.

17. கழுதையும் நாயும்

1. ஒரு வண்ணனிடம் ஒரு நாயும், கழுதையும் இருந்தன. ஒருநாள் நாய் தன் எஜமானன் மடிமேல் ஏறி விளையாடிக்கொண்டிருந்தது. எஜமானனும் அந்த நாயோடு பட்சமாய் விளையாடிக் கொண்டிருந்தான். அதற்குத் தோசையும் ஆப்பமும் கொடுத்தான். அந்த நாய் அவற்றைத் தின்று விட்டு எஜமானன் மடியில் சுருண்டு மடங்கிப் படுத்துக்கொண்டு தூங்கிவிட்டது.

2. அதை எல்லாம் கழுதை பார்த்துக் கொண்டிருந்தது. அது "ஆ! ஆ! அந்த நாய்க் குட்டிக்கு என்ன சொகுசு! எஜமானன் அதை எப்படிக் கொஞ்சுகிறான்? இவ்வளவுக்கும் அது செய்கிற காரியம் என்ன? அங்கும் இங்கும் துள்ளிக் குதித்துக் குரைக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை. அப்படி நான்கூடத்தான் செய்ய முடியும். நானும் உள்ளே போய் நாய்க் குட்டியைப்போல் துள்ளி விளையாடினால் எஜமானன் மிகவும் சந்தோஷப் படுவான்; நம்மையும் கொஞ்சி விளையாடுவான். நானும் அவன் மடியில் படுத்துத் தூங்கலாம்" என்று நினைத்தது.

3. உடனே கழுதை வீட்டிற்கு முன் இருந்த திண்ணை அருகே வெகு அவசரமாக வந்தது. அங்கே எஜமானன் சுவரில் சாய்ந்து படுத்துக்கொண்டிருந்தான். கழுதை அங்கே வந்து முன் கால்களைத் தூக்கிக் கொண்டு கூத்தாட ஆரம்பித்தது.

4. கழுதை வருகிறதை வண்ணான் கண்டு

"என் சாமி! இதென்ன வேடிக்கை! ஏ கழுதாய்! உனக்கென்ன, பயித்தியமா?" என்றான்.

5. கழுதை நாய் செய்த நடனம்போலவே செய்தது. அது உரக்கக் கத்த ஆரம்பித்தது. தன் பின் கால்களை மேலே தூக்கி உதைத்துக் குதித்தது.

6. அதைக் கண்ட எஜமானன், "அடா! மடக் கழுதாய்" என்று வயிறு வெடிக்கச் சிரித்தான்.

7. எஜமானன் சிரிப்பதைக் கண்ட கழுதைக்கு நிரம்பச் சந்தோஷம் வந்துவிட்டது. அது தனக்குள் "பேஷ், நமது எஜமானன் நம்மை மெச்சுகிறான். நான் இப்பொழுது அவன் மடிமேல் ஏறிப்படுத்துக் கொள்கிறேன்"

என்று உடனே அது தன் முன்கால்கள் இரண்டையும் வண்ணான் மார்பிலே வைத்தது.

8. அதைக் கண்ட வண்ணான் நடுங்கிப்போய் விட்டான். அவன் "கூ! கூ!" என்று கத்தினான். அண்டை வீட்டுக்காரர்கள் உள்ளே ஓடிவந்தார்கள். கழுதை வண்ணான் மேல் ஏறி நிற்பதை அவர்கள் கண்டார்கள்; உடனே அதைத் தடியால் நன்றாய் அடித்தார்கள். கழுதை நோவு பொறுக்க முடியாமல் தன் லாயத்துக்கு ஓடிப் போய்விட்டது.

9. அது அங்கே போய், "அடே அப்பா! என்ன அடி? 'நாய் செய்யக் கூடியதைக் கழுதை செய்ய முடியாது' என்கிறதை நான் இனி ஒரு நாளும் மறக்கவேகூடாது" என்று சொல்லிக்கொண்டது.

பழமொழிகள் :—(1) ஔவியம் பேசேல். (2) தோற்பன தொடரேல். (3) கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்.

அர்த்தம் :—பட்சமாய்=நேசமாய். சொகுசு=சுகம். நடனம்=கூத்தாடல். உரக்க=சத்தமாய். மெச்சுகிறான்= புகழுகிறான். பொறுக்க=தாங்க. லாயம்=குதிரை, கழுதைகளைக் கட்டி நிறுத்தும் இடம். ஔவியம்=பொறாமை. தோற்பன=தோற்கக்கூடியவை. கருதாமல்=யோசிக்காமல். கருமங்கள்=காரியங்கள்.

கேள்விகள் :—(1) வண்ணான் கழுதையை எதற்காக வளர்க்கிறான்? (2) வண்ணான் செய்யும் வேலை என்ன? (3) பொறாமை கொண்ட கழுதை என்ன நினைத்தது? (4) பொறாமையால் கழுதை அனுபவித்த பலன் யாது? (5) இப்பாடம் கற்பிக்கும் நீதி யாது?

சித்திரம் :—ஒரு கழுதையின் படம் எழுது.

18. மாடு

1. பிள்ளாய், மேலே உள்ள படத்தில் என்ன காண்கிறாய்? ஒரு பசுவும் அதன் கன்றும் நிற்கின்றன. அருகில் ஒரு எருதும் நிற்கிறது அல்லவா? அவைகளுக்குப் பொதுவாக மாடுகள் என்று பெயர். நாம் அவைகளை வீட்டில் வளர்க்கிறோம்.

2. எருதினுடைய முதுகில் ஒரு சிறு சதைத் தடிப்பு இருக்கிறது. அதற்குத் திமில் அல்லது முசுப்பு என்று பெயர். அது பசுவுக்கு அவ்வளவாகப் பருத்திராது. பசுவுக்கு அடி வயிற்றின் கீழ் பால்மடி இருக்கிறது.

3. மாட்டின் தலையில் கூரான இரண்டு கொம்புகள் உண்டு. தன்னைத் தொந்தரவு செய்பவர்களைக் கொம்புகளால் அது முட்டும். இளங் கன்றுக்குக் கொம்புகள் இல்லை. கன்று வளர வளரக் கொம்பு முளைத்துப் பெரிதாகி வளரும்.

மாட்டினுடைய கழுத்தின் கீழ்த் தட்டையான சவ்வு நெடுக வளர்ந்து தொங்குகிறது.

4. மாட்டின் வால் நுனியில் மயிர் கொத்தாக இருக்கிறது. அதனால் ஈ, கொசுகு, எறும்பு முதலியவற்றை மாடு ஓட்டிக்கொள்ளும். மாட்டின் குளம்பு இரு பிளவாய் இருக்கிறது.

5. மாடு புல், வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு முதலியவற்றைத் தின்னும். அது அமைதியும், அடக்கமும் உடையது. மாடு மிகவும் உபயோகமான வீட்டு மிருகம். அது நமக்குக் கீழ்ப் படியும். அதை நாம் நன்றியோடு காப்பாற்ற வேண்டும்.

பழமொழி :—இளங்கன்று பயம் அறியாது.

அர்த்தம் :—வேறுபாடு=வித்தியாசம். நுனி=முனை. சவ்வு=சதையை மூடியுள்ள வெள்ளைத் தோல். நெடுக=நீண்டு. அமைதி=சாந்தம். கீழ்ப்படியும்=அடங்கி நடக்கும்.

கேள்விகள் :—(1) மாட்டினுடைய உடம்பின் உறுப்புக்களை எல்லாம் சொல். (2) மாட்டுக்குக் கொம்பாலும், வாலாலும் என்ன உபயோகம்? (3) மாட்டின் குணம் என்ன? (4) குளம்பு என்பது எது? (5) மாட்டின் குளம்பு எப்படி இருக்கும்? (6) மாடு என்ன தின்னும்? (7) நாம் ஏன் மாட்டினிடம் நன்றி பாராட்டவேண்டும்?

சித்திரம் :—மாட்டுக் குளம்பு ; வால்.



19. பாப்பா பாட்டு

1. பூவினிலே மணமிருக்கும் பாப்பா—நீயும்
பூவாக மலர்ந்து நல்ல மணந்தருவாய் பாப்பா.

2. மணியினிலே ஒளியிருக்கும் பாப்பா—நீயும்
மணியாக நல்ல வொளி தந்திடுவாய் பாப்பா.

3. கனியினிலே தேனிருக்கும் பாப்பா—நீயும்
கருத்தினிலே தேனாக நிறைந்திடுவாய் பாப்பா.

4. காட்டினிலே மருந்திருக்கும் பாப்பா—நீயும்
வீட்டினிலே மருந்தாக நிறைந்திடுவாய் பாப்பா.

5. அன்பினிலே துன்பமில்லை பாப்பா—நீயும்
அன்பினிலே இன்பமதைக்கண்டிடுவாய்பாப்பா.

அர்த்தம் :—பூவினிலே=பூவிலே. மணம்=வாசனை. மணியினிலே=மணியிலே. ஒளி=பிரகாசம். நல் ஒளி= நல்ல ஒளி. தந்திடுவாய்=தருவாய். கனி=பழம். கருத்தினிலே=நெஞ்சிலே. இன்பமதை=இன்பத்தை. கண்டிடுவாய்=பார்ப்பாய்.



20. குதிரை

1. மிருகங்களுக்குள் குதிரையே மிகவும் அழகியது. அது ஏறக்குறைய எல்லாத் தேசங்களிலும் இருக்கிறது. ஆனால், அரபி தேசத்துக் குதிரையே மிகச் சிறந்தது.

2. குதிரையும் மாட்டைப்போல ஒரு வீட்டு மிருகம். ஆனால் அவை இரண்டுக்கும் வித்தியாசங்கள் உண்டு. குதிரைக்குக் கொம்பு கிடையாது; குளம்பும் பிளவு பட்டு இல்லை; தலை நீளம்; காது பருத்து இராமல் நீண்டு இருக்கும். குதிரையின் மூக்குச் சிறியது. குதிரையின் பிடரியில் மயிர் தொங்கும். அதற்குப் பிடரி மயிர் என்று பெயர். குதிரையின் வால் மயிர் அடி முதல் நுனிவரையில் கற்றையாய்த் தொங்கும்.

3. அதனுடைய கால்கள் நீண்டு, சிறுத்து வலுத்து இருக்கின்றன. ஆகையால், அது

விரைவாக ஓடுகிறது. அதற்கு உடல் நீளம்; முதுகு அகலமும், வலிமையும் உள்ளது. ஆகையால், நாம் அதன் மீது ஏறிச் சவாரி செய்யலாம். அதற்கு முன்வரிசைப் பற்கள் கூரானவை; கடைவாய்ப் பற்கள் அகன்று தட்டையாய் இருக்கும். இந்த இரண்டுவிதப் பற்களுக்கும் இடையில் பல் கிடையாது. அங்கே தான் கடிவாளத்தை மாட்டவேண்டும்.

4. குதிரை நம் சொல் கேட்டு நடக்கும். அது வலிமையும், விரைவும், தைரியமும், பொறுமையும், விடா முயற்சியும், ஞாபக சக்தியும் உடையது. அது நிழலைக் கண்டால் மாத்திரம் பயப்படும். அதை வேலைசெய்ய இலேசாய்ப் பழக்கலாம். அது எஜமானனிடத்தில் விசுவாசமும், கம்பீர நடையும் உடையது. அது நன்றாய் உழைக்கும் மிருகங்களில் ஒன்று. குதிரை படுப்பதில்லை; அதிகம் தூங்காது; நின்றபடியே தூங்கும். அது புல்லையும், வேக வைத்த கொள்ளையும், கடலையையும் தின்னும்.

5. குதிரை நமக்காக வண்டி இழுக்கும்; சுமை சுமக்கும்; பலவிதமான வேலைகள் செய்யும். ஆகையால், நாம் குழந்தையைப்போல் அதை அன்பாக நடத்தவேண்டும்.

அர்த்தம்:—சிறந்தது = மேலானது. கற்றையாய் = அடர்த்தியாய். வலிமை = பலம். கடிவாளம் = குதிரை வாயில் வைக்கப்படும் இரும்பு. விசுவாசம் = அன்பு.

கேள்விகள்:—(1) எந்தத் தேசத்துக் குதிரை சிறந்தது? (2) மாட்டுக்கும் குதிரைக்கும் உள்ள வேறுபாடு என்ன? (3) குதிரையின் அங்க அமைப்பை விவரித்துச் சொல். (4) கடிவாளத்தின் உபயோகம் யாது? (5) குதிரையின் குணம், தீனி, உபயோகம் இவைகளைச் சொல்.

21. "ஒன்றே செய்க"

1. ஒன்றே செய்க, ஒன்றே செய்க,
   ஒரோர் காலும் ஒன்றே செய்க.
2. ஒரோர் காலும் ஒன்றே செய்க,
   ஒன்றே தானும் நன்றே செய்க.
3. 'செய்வினை திருந்தச் செய்வாய்' என்று
   ஔவை கூறிய உறுதியும் இதுவே !
4. ஆடும் போழ்தில் ஆடுக ஆடுக !
   ஆடுக அகமகிழ்ந்து ஆடுக ஆடுக,
5. கற்கும் வேளையில் கண்ணுய்க் கற்க,
   கற்பது எதையும் கருத்தாய்க் கற்க.
6. ஒன்றே செய்க ஒரோர் காலும்,
   ஒன்றே தானும் இன்றே செய்வாய்.

பழமொழிகள் :—(1) காலந்தவறேல்.
(2) தூக்கி வினைசெய். (3) பருவத்தே பயிர்செய்.

அர்த்தம் :—ஒரோர் காலும்=ஒவ்வொரு வேளையும். நன்றே செய்க=நல்லதையே செய். உறுதி=நல்ல புத்தி. அகமகிழ்ந்து=மனம் சந்தோஷித்து. தூக்கி=ஆராய்ந்து. வினை=வேலை. பருவத்த=தக்க காலத்திலே.

கேள்விகள் :—(1) நாம் செய்ய வேண்டிய வேலைகளை எப்படிச் செய்யவேண்டும்? (2) ஔவை கூறிய உறுதி யாது? (3) ஆடல், கற்றல் இவைகளைச் செய்ய வேண்டியது எப்படி? (4) ஏன் ஒரே காலத்தில் ஒரே நன்மையைச் செய்ய வேண்டும் என்ற நீதி கற்பிக்கப்பட்டது?

22. காற்றும் சூரியனும்

காற்று :—ஐயா! சூரியனே! அடியேன், காற்று, நமஸ்காரம். நீர் சுகந்தானே?

சூரியன் :—ஆம்! சுகந்தான் காற்றே! உனக்கு அநேக ஆசீர்வாதம்.

(என்று சொல்லிக் கொண்டே சீக்கிரம் போதல்).

காற்று :—என் ஐயா, அவ்வளவு விரைவாய்ப் போகிறீர்? சற்று நின்று பேசக் கூடாதோ?

சூரியன் :—உனக்கு என்ன வேலை இருக்கிறது? அதனால்தான் நீ ஒழிவாய் நின்று பேசுகிறாய். நான் எந்நேரமும் ஓடிக்கொண்டே இருக்க வேண்டியவன் ஆயிற்றே!

காற்று :—எனக்கா வேலையில்லை? நான் எப்போதும் எங்கும் நிறைந்து வீசிக் கொண்டு இருக்க வேண்டுமே! இல்லாவிட்டால் யாருக்கும் மூச்சுவிட முடியாதே! புழுக்கத்தால் எல்லாரும் மிகவும் துன்பப்படுவார்களே! நான் இல்லாமல் போனால் எந்த உயிரும் பிழைக்காது.

சூரியன் :—அப்படியா? இப்போதுதான் உனக்கும் வேலை இருக்கிறது என்று அறிந்தேன். இதுவரையில் எனக்குத் தெரியாது.

காற்று :—தெரிந்துகொண்டீரா? சரி, போகட்டும்; நீர் ஏன் எந்நேரமும் ஓடிக்கொண்டிருக்கிறீர்? உமக்கு என்ன வேலை இருக்கிறது?

சூரியன்:—எனக்கா! உனக்குத் தெரியாதோ? சொல்லுகிறேன் கேள். நான் எப்போதும் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது. இருந்தால், என்னுடைய வெப்பத்தை யாரும் தாங்க மாட்டார்கள். நான் இல்லாத இடம் இருண்டே இருக்கும். அங்கே இருப்பவர்கள் குளிரால் வருந்துவார்கள். அல்லாமலும், அங்கே மரம், செடி, பயிர் முதலியவையும் வளரமாட்டா. நான்

போகாமல் நின்ருல், அங்கே எல்லா உயிரும் துன்பப்பட்டு இறக்கும். ஆகையால், நான் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கவேண்டும்.

காற்று:—அப்படியா! ஆனல் சரி! நீர் ஓடுவது நியாயமே; உம்மை இதுவரையில் நிறுத்தியதற்குக் கோபியாதீர்; மன்னியும். போய்வாரும் ஐயா, நமஸ்காரம்.

சூரியன் :—கோபம் இல்லை; நாம் இருவரும் அவசியமான வேலைகளையே செய்கிருேம். போய் வருகிறேன்; ஆசீர்வாதம்.

பழமொழிகள் :—(1) சிறு துரும்பும் பல்குத்த உதவும். (2) காற்று உள்ளபோதே தூற்றிக்கொள்.

அர்த்தம் :—விரைவாய்=சீக்கிரமாய். சற்று=கொஞ்சம். புழுக்கம்=வெப்பம். துன்பம்=வருத்தம்.

கேள்விகள்:—(1) சூரியனும் காற்றும் ஒருவரை ஒருவர் சந்தித்தவுடன் அவர்கள் செய்தது யாது? (2) காற்ருல் நமக்கு என்ன உபயோகம்? (3) சூரியனல் நமக்கு என்ன பிரயோஜனம்? (4) காற்றும், சூரியனும் பிரிந்து போகும் போது செய்துகொண்டது யாது? (5) இப்பாடம் கற்பிக்கும் நீதி யாது?

குறிப்பு:—இந்தப் பாடத்தைப் பிள்ளைகள் சம்பாஷணையாக நடிக்கலாம்.

23. " நான் ஓர் ஆறு "

1. நான் யார் தெரியுமா? நான் ஓர் ஆறு. என்னை நதி என்றும் சொல்வார்கள். நான் மலையில் பிறந்தேன். மலையில் இருக்கும் ஊற்றே என்னுடைய தாய். வானத்தில் இருந்து பொழியும் மழை நீரே என்னுடைய தந்தை.

2. மழைக்காலத்தில் நான் வெள்ளமாகப் பெருகிப் பாய்கிறேன். வெயில் காலங்களில், ஊற்று நீரே என்னை வளர்க்கிறது. நான் ஓடும் தரையிலிருந்து ஊற்று நீர் சுரக்கும். அத்தண்ணீரே, நான் அடியோடு உலராதபடி என்னைக் காக்கும்.

3. நான் உண்டாகும் இடத்தில் என்னைப் போன்ற வேறு சில ஆறுகளும் உண்டாயின. காட்டில் உள்ள ஊற்றிலும் சில ஆறுகள் பிறந்தன. அவைகளில் சில என்னிடத்தில் வந்து கலக்கின்றன. அவைகளே எனக்கு உபநதிகள் ஆகும். என்னிடத்திலிருந்து சில ஆறுகள் பிரிந்து போகின்றன. அவைகள்தாம் என் கிளை நதிகள்.

4. நான் பல மலைகள், காடுகள், நாடுகள், ஊர்கள் வழியாய் ஓடுகின்றேன். மழைக் காலத்தில் வெள்ளம் பெருக, நான் இரு கரையும் புரண்டு ஓடுவேன்; சில சமயங்களில் இரு கரைகளையும் உடைத்து விடுவேன். அப்போது, வழியில் அகப்படுகிறவைகளை எல்லாம் அடித்துக்கொண்டு போவேன். என்னைத் தடுக்க யாராலும் முடியாது. இவ்வாறு நான் ஓடி முடிவில் கடலில் கலக்கிறேன்.

5. என் இருபக்கங்களிலும் உள்ள ஊரார் என்னிடத்திலிருந்து கால்வாய்கள் வெட்டுகிறார்கள். அவைகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு போய் வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். நான் இன்னும் பல விதங்களிலும் ஜனங்களுக்கு உபயோகமாகிறேன்.

பழமொழி :—ஆற்று நீரையும் நாய் நக்கித் தான் குடிக்கும்.

அர்த்தம் :—வானம் = மேகம். பொழியும் = பெய்யும். வெள்ளம் = நீர்ப்பெருக்கு. சுரக்கும் = ஊறும். இவ்வாறு = இப்படி.

171222

கேள்விகள் :—(1) ஆறு எங்கே உண்டாகிறது? (2) ஆறு எப்போது பெருகும்? (3) வெள்ளம், உபநதி, கிளைநதி என்பவைகள் யாவை? (4) வெயில் காலத்தில் ஆறு முழுவதும் ஏன் உலருவதில்லை? (5) ஆற்றினால் உண்டாகும் நன்மை, தீமை யாவை?

சித்திரம்:—மலை; ஆறு; உபநதி; கிளைநதி.

24. உலகநீதி வாக்கியங்கள் II

சொல்லக் கூடாதவை. (ஐந்து)

1. இறந்தாலும் பொய்தன்னைச்
   சொல்ல வேண்டாம்.

2. உற்றாரை உதாசினங்கள்
   சொல்ல வேண்டாம்.

3. ஒருவரையும் பொல்லாங்கு
   சொல்ல வேண்டாம்.

4. நெஞ்சாரப் பொய்தன்னைச்
   சொல்ல வேண்டாம்.

5. புண்படவே வார்த்தைதனைச்
   சொல்ல வேண்டாம்.

அர்த்தம் :—உற்றார்=உனக்கு வேண்டியவராய் இருப்பவர்கள். உதாசினங்கள்=பழிச்சொற்கள். பொல்லாங்கு= கெடுதி; குற்றம். புண்பட=மனம் வருந்தும்படி வார்த்தை=சொல்.



25 நீரின் குணம்

கமலம் :—முத்து, நீ இங்கே வா. நான் ஒரு வேடிக்கை காட்டுகிறேன்.

முத்து :—என்ன வேடிக்கை?

கமலம் :—முத்து, இதோ இரண்டு தட்டுகள் இருக்கின்றன. நான் ஒரு தட்டில் கொஞ்சம் மரப் பொடியைக் குவித்து வைக்கிறேன். நீ வேறொரு தட்டில் கொஞ்சம் தண்ணீரைக் குவித்து வைக்கிறாயா?

முத்து :—எங்கே நீ செய் பார்க்கலாம்.

கமலம் :—இதோ! ப்ார்! நான் மரப் பொடியைக் குவித்துவிட்டேன்.

முத்து :—அக்காள், இது ஒரு பெரிய காரியமா ? இதோ தண்ணீரைக் குவித்துவிட்டேன், பார்.

கமலம் :—தம்பி! நீ தட்டு நிறையத் தண்ணீரை ஊற்றியிகிருக்கிறாய். ஆனால், என்னைப் போலத் தண்ணீரைக் குவித்து வைக்கவில்லையே.

முத்து :—அக்காள், தண்ணீர் குவிய மாட்டேன் என்கிறதே. நான் அதிகமாகத் தண்ணீர் ஊற்றினேன் ; ஆனால் அது தட்டில் கவிழ்ந்து விழுந்த பிறகு, மேசை மேல் வழிந்தோடி இதோ கீழே விழுந்துவிட்டதே.

கமலம் :—முத்து, இதனால் நீ என்ன தெரிந்து கொள்ளுகிறாய் ?

முத்து :—தண்ணீர் எப்பொழுதும் பரந்துதான் நிற்கும். ஒரு போதும் குவிந்து நிற்காது.

கமலம் :—அவ்வளவுதானா ?

முத்து :—அது எப்போதும் மேலிடத்திலிருந்து கீழ் இடத்தை அடையும்.

கமலம் :—முத்து, இது தண்ணீருடைய பல குணங்களில் ஒரு குணம் ; தெரியுமா ?

முத்து :—தெரிந்து கொண்டேன்.

அர்த்தம்:—அடையும்=சேரும்.

கேள்விகள் :—(1) நீரிற்குள்ள சில குணங்களைச் சொல்லு. (2) நீரினால் உள்ள நன்மைகளைச் சொல்லு. (3) கமலம் மரப் பொடியை என்ன செய்தாள் ? (4) முத்து தண்ணீரை என்ன செய்தான் ? தண்ணீர் ஏன் குவியவில்லை. (5) தண்ணீரின் ஓட்டம் எப்படிப்பட்டது ?

26. ஸ்ரீராமர் I

1. முற்காலத்தில் அயோத்தியை தசரத மகா ராஜா ஆண்டார். அவருக்குக் கௌசலை, சுமித்திரை, கைகேயி என மூன்று மனைவிமார் இருந்தார்கள். கௌசலைக்கு ஸ்ரீராமரும், கைகேயிக்குப் பரதரும், சுமித்திரைக்கு இலக்ஷ்மணரும், சத்துருக்கனரும் பிள்ளைகள்.

2. நான்கு பிள்ளைகளும் அருமையாக வளர்ந்து, எல்லா வித்தைகளையும் கற்றுச் சிறந்த வீரர்கள் ஆனார்கள். அப்போது ஸ்ரீராமர் தாடகையைக் கொன்று விசுவாமித்திரருக்கு உதவி செய்தார். மிதிலையில் ஜனகமகாராஜா சபையில் இருந்த வில்லை வளைத்து, ஸ்ரீராமர் சீதையைக் கல்யாணம் செய்துகொண்டார். பின்பு அவர் அயோத்திக்குத் திரும்பும்போது, வழியில் பரசுராமரை வென்றார்.

3. ஒரு நாள் தசரதர் ஸ்ரீராமருக்கு இராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய எண்ணினார். உடனே, அவர் அதற்கு நல்ல நாளும் நிச்சயித்தார். ஆனால், கைகேயி அதைக் கேட்டுப் பொறாமை கொண்டாள்; தன் மகன் பரதன் பட்டம் பெற வேண்டும் என்று நினைத்தாள்.

4. ஆகையால், ஸ்ரீராமரைப் பதினான்கு வருஷம் காட்டுக்கு அனுப்பும்படி அவள் தசரதருக்குச் சொன்னாள். ஸ்ரீராமரும், "தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை" என்று தவ வேஷத்தோடு காட்டுக்குச் சென்றார். அவருடன், சீதையும் இலக்ஷ்மணரும் சென்றார்கள்.

5. ஸ்ரீராமரைப் பிரிந்த வருத்தத்தால் தசரதர் இறந்தார். அச்சமயம் பரதர் தம் அம்மான் வீட்டிற்குப் போயிருந்தார். தந்தை இறந்ததைக் கேள்விப்பட்டு அவர் அயோத்திக்குத் திரும்பி வந்தார்; வந்தவர் தமக்கு இராஜ்யம் வேண்டாம் என்று மறுத்தார். பின்பு, அவர் காட்டுக்குப் போய் ஸ்ரீராமரை அழைத்தார். ஆனால், அவர் பதினான்கு வருஷம் கழிந்த பின்பே வருவதாகச்சொன்னார்.

பரதர் அவருடைய பாதுகைகளை அடையாளமாக வாங்கிப்போய் நந்திக் கிராமத்தில் தங்கினார். அங்கே இருந்து ஸ்ரீராமருக்குப் பதிலாக ஆண்டுவந்தார்.

பழமொழி :—மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

அர்த்தம் :—மனைவிமார்=பெண்சாதிகள். வென்றார்=ஜயித்தார். பாதுகை=மிதியடி; பாதக் குறடு. மூத்தோர்=பெரியோர். வார்த்தை=சொல். அமிர்தம்=தேவருணவு.

கேள்விகள் :—(1) அயோத்தியை ஆண்டவர் யார்? அவருடைய மனைவி மக்கள் யார்? (2) ஸ்ரீராமர் என்ன செய்து சீதையைக் கல்யாணம் பண்ணினார்? (3) ஸ்ரீராமர் ஏன் காட்டுக்குப் போனார்? அவருடன் போனவர்கள் யார்? (4) ஸ்ரீராமர் போன பின்பு அயோத்தியில் நடந்தது யாது?

சித்திரம்:—வில்; அம்பு; பாதுகை.

27. விநோத விடு கதைகள்

1. ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி—எது?
(ஆகாயம்)

2. புட்டுக்கூடை போல் பூ பூக்கும்
பறிக்கப் போனால் எட்டாது—எது?
(சந்திரன்)

3. ஒரு பொறி பறக்க ஊரெல்லாம் பொதி—
என்ன? (விளக்கு)

4. போவான் வருவான் திம்மப்பன்; ஒரு
காலில் நிற்பான் திம்மப்பன்—யார்? (கதவு)

5. கருப்புச் சட்டைக்காரன்; காவலில் கெட்
டிக்காரன்—யார்? (பூட்டு)

6. செம்பு நிறைய கெம்பு—எது?
(மாதுளம்பழம்)

7. ஆயிரம் பேர் தச்சர் கூடி, அழகான மண்ட
பம் கட்டி, ஒருவன் கண்பட்டு உடைந்த
தாம் மண்டபம்—எது? (தேன் கூடு)

டாக் டீக் என்னுமாம் குதிரை
தண்ணீரைக் கண்டால் தவிக்குமாம்
குதிரை—எது? (செருப்பு)

28. ஸ்ரீராமர் II

1. ஸ்ரீராமர் காட்டில் சந்தோஷமாகவே வாழ்ந்தார். அப்போது இராக்ஷசர்களைக் கொன்று ரிஷிகளுக்கு உதவி செய்தார். பின்பு, அவர் தெற்கே தண்டகாரண்யம் போனார். அங்கே, ஒரு நாள் ஸ்ரீராமரும், இலக்ஷ்மணரும் இல்லாத வேளையில் இராவணன் என்னும் கொடிய இராக்ஷஸன் வந்தான். அவன் இலங்கைக்கு அரசன். இலங்கை தெற்கே சமுத்திரத்திற்கு நடுவில் இருக்கும் ஒரு தீவு. அவன் சீதையின் அழகைக் கண்டு அவளைப் பலவந்தமாக இலங்கைக்குத் தூக்கிக் கொண்டு போனான்.

2. அங்கே, தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி இராவணன் சீதையை வேண்டினான். சீதை ஸ்ரீராமருக்கு உண்மையான மனைவியானதால் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதனால், இராவணன் கோபம் கொண்டான்; சீதையை அசோகவனத்தில் காவலில் வைத்தான்.

3. ஸ்ரீராமரும், இலக்ஷ்மணரும் திரும்பி வந்தபோது சீதையைக் காணவில்லை. அவர்கள் மிகவும் வருத்தத்துடன் காடு எங்கும் தேடி அலைந்தார்கள். பின்பு, ஜடாயு என்னும் பக்ஷி, "சீதையை இராவணன் எடுத்துப் போனான்" என்றது. உடனே அவர்கள் இலங்கைக்குப்

புறப்பட்டார்கள். அப்போது, அவர்களுக்குச் சுக்ரீவனும், அநுமாரும் நண்பர் ஆனார்கள். சுக்ரீவனுக்குக் கெடுதி செய்த அவனுடைய அண்ணன் வாலியை ஸ்ரீராமர் கொன்றார்.

4. அப்புறம், அநுமார் இலங்கைக்குப் போய், ஊக்கத்தோடு சீதை இருக்கும் இடம் அறிந்து வந்தார். பின்பு, இலங்கைக்குப் போக ஸ்ரீராமர் குரங்குகளின் உதவியால் ஒரு பாலம் கட்டினார். அதற்கு ஸேது என்று பெயர். அதன் வழியாக ஸ்ரீராமர் சுக்ரீவனோடும், குரங்குப்படையோடும் இலங்கைக்குச் சென்றார். அங்கே,

இராவணனுடைய தம்பி விபீஷணர் அவரோடு சிநேகம் செய்துகொண்டார். ஸ்ரீராமர் இராவணனுடன் சண்டையிட்டார். சண்டையில் இராவணன் இறந்தான். அப்போது ஸ்ரீராமர், இலங்கைக்கு விபீஷணரை அரசர் ஆக்கினுர். இதற்குள் பதினுன்கு வருஷங்கள் ஆயின.

5. ஸ்ரீராமர் சீதையை மீட்டுக் கொண்டு அங்கிருந்து திரும்பிப் பரதரிடம் போனுர். பிற்பாடு, எல்லோரும் அயோத்திக்குச் சென்ருர்கள். அங்கே ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. எல்லாரும் சந்தோஷிக்க, ஸ்ரீராமர் அயோத்தியை ஆண்டு வந்தார்.

பழமொழிகள்:—(1) ஊக்கமது கைவிடேல். (2) அடாது செய்பவர் படாது படுவர். (3) அடுத்தவரைஒருநாளும் கெடுக்கவேண்டாம்.

அர்த்தம் :—ஒப்பாததால் = சம்மதிக்காததால். வனம் = காடு. சிறை = காவல். பக்ஷி = பறவை. நண்பர் = சிநேகர். ஊக்கம் = உற்சாகம்; முயற்சி. பாலம் = வாராவதி. படை = சேனை. அடாது = தகாத காரியம்.

கேள்விகள்:—(1) சீதையைக் கொண்டுபோனது யார்? எங்கிருந்து? எப்போது? எவ்விடத்திற்கு? (2) சீதை எங்கே சிறை இருந்தாள்? ஏன்? (3) சீதையைக் கொண்டுபோனவர் இன்னுரென்று ஸ்ரீராமருக்கு எப்படித் தெரியும்? (4) ஸ்ரீராமருடைய நண்பர்கள் யார்? (5) ஸ்ரீராமர் சுக்ரீவனுக்குச் செய்த நன்மை யாது? (6) சீதை இருப்பிடத்தைக் கண்டு வந்தது யார்? (7) ஸ்ரீராமர் சீதையை எவ்விதமாக மீட்டுக் கொண்டு வந்தார்? (8) இப்பாடம் போதிக்கும் நீதி யாது?

29. கண்ணன்

யசோதை :—கண்ணா வாடா கண்மணியே
கண்ணா ஏடு தின்ன வாடா
கண்ணா வாடா கண்மணியே
உண்ண நல்ல ஏடு வாடா

கண்ணன் :—தின்றேன் ஏடு நானம்மா
கன்றை ஓட்டிச் செல்வேனே
இன்று காலை செல்வேனே
இன்று மாலை வருவேனே

யசோதை :—கண்ணா செல்வாய் கண்மணியே
கன்றை ஓட்டிச் சென்றிடுவாய்
இன்று காலை சென்றிடுவாய்
இன்று மாலை வந்திடுவாய்

கண்ணன் :—யமுனை ஆற்றில் நானம்மா
தமயனோடு அலைவேனே
யமுனைச் சோலை மலரெல்லாம்
தமயனோடு கொய்திடுவேன்

யசோதை :—கண்ணா வேண்டாம் கண்மணியே
திண்ணம் யமுனை செல்லவேண்டாம்
கண்ணைக் கடிக்கும் பாம்பங்கே
கண்ணா வேண்டாம் கண்மணியே

கண்ணன் :—பாம்பு கடித்தால் நானம்மா
பாம்பின் தலையை நசுக்கிடுவேன்
பாம்பைப் பிடித்து நானம்மா
தாம்புக் கயிறாய்ச் சுழற்றிடுவேன்

யசோதை :—கண்ணா வேண்டாம் கண்மணியே
திண்ணம் யமுனை செல்லவேண்டாம்
கண்ணா உன்னை நான் இழந்தால்
புண்ணாய் நொந்து சாவேனே

கண்ணன் :—பாம்பில்லாத இடத்திலம்மா
பாம்பாய் ஆடி நான் வருவேன்
பாம்பு கடிக்க வந்ததென்றால்
பாம்பைக் கொன்று மீண்டிடுவேன்.

அர்த்தம் :—மலர் = பூ. திண்ணம் = நிச்சயமாக. தாம்புக் கயிறு = வடக்கயிறு. மீண்டிடுவேன் = திரும்பிவிடுவேன்.



30. புளியமரமும் தென்னைமரமும்

புளியமரம் :—ஏன் ஐயா, தென்னைமரமே! எந்நேரமும் சலசல வென்று சத்தம் இடுகிறீர்? உயரமாக வளர்ந்ததால் கர்வமோ? உம்மால் என்ன நன்மை உண்டு? ஏன் வீண் பெருமை காட்டுகிறீர்?

தென்னைமரம் :—ஐயா, புளியமரமே! நான் ஒன்றும் வீண் பெருமை காட்ட வில்லை. காற்றில்

என்னுடைய நீண்ட ஓலைகள் அசைவதால் சத்தம் உண்டாகிறது. அது போகட்டும்; என்னால் நன்மை இல்லை என்றீர்; உம்மால் என்ன பயன், சொல்லும் பார்ப்பேம்.

புளியமரம் :—யாரும் வெய்யிலிலும், மழையிலும் வந்து தங்க நான் நிழல் கொடுக்கிறேன். என்னுடைய உலர்ந்த மிலாறுகள் அடுப்பு எரிக்க உதவும்.

தென்னைமரம் :—ஐயா! இதுதானா ஒரு பெரிய பலன்? உமது அடியில் யார் தங்கினாலும் இரத்தத்தைச் சுண்டவைக்கிறீர்! ஆகையால், யாரும் உமது நிழலில் தங்கார். நான் பரந்த நிழல் தராவிட்டாலும், என் ஒவ்வொரு உறுப்பும் உபயோகமாகிறது. என் ஓலையால் வீட்டிற்குக் கூரை வேயலாம்; பாய், கூடை முதலியவை முடையலாம். குருத்து ஓலையால் விசேஷ நாட்களில் தோரணங்கள் கட்டலாம். ஈர்க்கு, குப்பையைக் கூட்டவும், மட்டை, அடுப்பு எரிக்கவும் உதவுகின்றன.

புளி :—ஐயா! என் அடிமரம் செக்குக்கு உதவுமே!

தென்னை :—என் அடி மரமும் நீர் நிரப்பும் தொட்டிகள் ஆகும்; தோணி செய்யவும் உதவும்.

புளி :—என் உலர்ந்த இலை பித்தத்தைத் தணிக்க ரசம் வைக்கவும், காய் துவையல் செய்ய

வும், பழம் கறிகாய்களுடன் கூட்டிச் சமைத்து உண்ணவும் உபயோகமாகும். இது உம்மால் கூடுமோ ?

தென்னை :—என் காயில் உள்ள இள நீரைக் குடித்தால் குளிர்ச்சியாயும், இனிப்பாயும் இருக்கும். தேங்காய் பூஜைக்கும், தின்பதற்கும், துவையலுக்கும், கறிகளில் கலப்பதற்கும் உதவும். தேங்காய் எண்ணெய் தலைக்குத் தடவவும், தின்பண்டம் செய்யவும், விளக்கு எரிக்கவும், சவுக்காரம் மெழுகுவர்த்தி முதலிய செய்யவும் உதவும்; ரணத்தையும் ஆற்றும். தேங்காய் நாரால் கயிறு திரிக்கலாம்; பாய் பின்னலாம். நாம் இருவரும் வெவ்வேறு விதங்களில் உபயோகமாகிறோம். ஆகையால், ஒருவரை ஒருவர் பழிக்கக்கூடாது.

புளி :—ஐயா ! தென்னையாரே ! தெரியாமல் பழித்தேன் ; மன்னிக்கவும்.

பழமொழிகள் :—(1) பழிப்பன பகரேல். (2) வாது முன் கூறேல்.

அர்த்தம் :—தோணி=படகு. மிலாறு—மெல்லிய சிறு கிளைகள். தணிக்க—குறைக்க. பழிப்பன—நிந்திக்கும் சொற்கள். பகரேல்—சொல்லாதே.

கேள்விகள் :—(1) புளியமரத்தால் என்ன உபயோகம்? (2) தென்னைமரத்தால் என்ன உபயோகம் ? (3) எந்த விஷயங்களில் புளியமரம் தென்னைமரத்துக்கு ஒப்பாகும் ? எந்த விஷயங்களில் ஒப்பாகாது ? (4) இப்படம் போதிக்கும் நீதி யாது ?

சித்திரம் :—தென்னைமரம் ; தேங்காய்.

31. பெற்றோரே தெய்வம்

காட்சி 1

இடம் : பள்ளிக்கூடம்

[பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் கூடியிருக்கிறார்கள். உபாத்தியாயர் கையிற் பிரம்புடன் பிரவேசிக்கிறார்.]

பையன்கள்:—அடே வாத்தியார்! அடே வாத்தியார் (என்று சொல்லிக் கொண்டு பாடத்தைக் கவனிக்கிறார்கள்.)

உபாத்தியாயர் :—(ஆசனத்தில் அமர்ந்து) அடே எழுந்திருங்கள்—(பையன்கள் எழுந்திருக்க) உட்காருங்கள். (உட்கார்ந்தவுடன்) சிவகாந்தம்! நீ உலக நீதி சொல்லு.

சிவகாந்தம் :—

ஓதாமலொருநாளும் இருக்கவேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
மாதவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

உபாத்தியாயர் :—நில்லு—அடே அச்சுதா! நீ பெருக்கல் வாய்ப்பாடு சொல்லு.

அச்சுதன் :—ஓரொன்—ஒன்று. ஈரொன் றிரண்டு. மூவொன்று—மூன்று.

ஒருவன் :—(பிரவேசித்து) ஐயோ! ஊரெல் லாம் வெள்ளம்! காவேரியில் வெள்ளம்! ஓடுங் கள் ; ஓடித் தப்புங்கள்.

[உபாத்தியாயர் உள்பட எல்லாரும் கத்திக்கொண்டு ஓடுகின்றனர்.]

காட்சி 2

இடம் : ஒரு தெரு

சங்கரன் பிள்ளை :—(தலையிலும் இடுப்பிலும் மூட்டையுடன் பிரவேசித்து) அடே சுந்தரம்—அம்மா எங்கே? ஓடிவா.

சுந்தரம் (சங்கரனுடைய மகன்) :—(பிரவேசித்து) இதோ வந்தேன்—அம்மா இதோ வருகிருள்.

மீனுட்சி :—(சங்கரன் பிள்ளை மனைவி) :—(பிரவேசித்து) நாதா ! பணப் பெட்டி எங்கே ?

சங்கரன் பிள்ளை :—இதோ—தலை மூட்டையில் இருக்கிறது.

மீனுட்சி :—நகைப் பெட்டி ?

சங்கரன் பிள்ளை :—இடுப்பு மூட்டையில் இருக்கிறது.

மீனுட்சி :—போங்கள் ; இருட்டாவதற்கு முன் வேறு ஊர் போய்ச் சேரலாம். (போகிருர்கள்.)

தாமோதரம் (சங்கரன் பிள்ளையின் தம்பி) :—(வயது சென்ற பெற்ருேரைக்காவடிகட்டித்தூக்கிக்கொண்டு பிரவேசித்து) அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்—மாதாவை ஒரு நாளும் மறக்கவேண்டாம்—பணம் போனுல் நாளைக்குச் சம்பாதிக்கலாம். (வெளிப்படையாக) அம்மா பயப்படாதே ! அப்பா பயப்படாதேயுங்கள் ! (போகிருன்.)

காட்சி 3

இடம் : ஒரு சாலை

சங்கரன் பிள்ளை :—(தன் மகனுடனும் மனைவியுடனும் மூட்டைகளுடனும் பிரவேசித்து) நன்றாய் இருட்டிப் போயிற்று. வாருங்கள் நடந்து. (பாடுகிறான்)

பணமே உன்னால் உண்டு குணமே—இந்தப்
பாரில் பணத்தினோர் பெருமையே பெருமை
[—அதைப்
பரிபாலிப்பார்க்கில்லை பாரினில் சிறுமை
(பணமே)

திருடர்கள் இருவர் :—

தந்தானமடி தந்தானமடி தந்தானக்குயிலே
தந்தானமடி தந்தானமடி தந்தானக்குயிலே
கோட்டைக் கொத்தள மீதிலேறிக் கூசாமற்
[குதிப்பேன்
கொத்தவாலுங் கண்டுகொண்டால் குதித்து
[ஓடிடுவேன் (தந்தா)

(பாடியபின்) இங்கே நில்லு.

சங்கரன் பிள்ளை :—யாரது ?

திருடர் :—(நெருங்கி) மூட்டையைக் கீழே வை.

சங்கரன் பிள்ளை :—ஐயோ !

திருடர் :—கத்தாதே— அடிபடுவாய் — மூட்டையைக் கீழே வை.

[சங்கரன் பிள்ளை மூட்டைகளை வைக்கத் திருடர்கள் அவிழ்த்துப் பணத்தையும் நகைகளையும் எடுத்துக்கொண்டு

செல்கின்றனர். சங்கரன் பிள்ளை முதலியவர்கள் அழுது கொண்டு செல்கிறார்கள்.]

தாமோதரன்:—(தன் தாய் தந்தையருடன் பிரவேசித்து)

ஆனந்தக் களிப்பு—மெட்டு

பெற்றோரே பிரத்யக்ஷ தெய்வம்—அவரைப்
பிரியமாய் எந்நாளும் போற்றுதல் தெய்வம்—
பெற்றோர் செயுமாசீர்வாதம்—என்றும்
பெறுவதினாலுண்டு தெய்வப் பிரசாதம் (பெற்)

(என்று பாடிக்கொண்டே பிரவேசிக்கிறான்.)

திருடர்கள் :—(அவனைப் பார்த்துத் தங்களுக்குள்) ஆச்சரியம்—என்ன வேடிக்கையிது (வெளிப்படையாக) நீ யாரப்பா?

தாமோதரன் :—(நின்று) நான் பரம ஏழை—என்னிடம் பொருளில்லை—என்னுடைய தாய் தந்தையர்தாம் எனக்குப் பொருள்; வெள்ளத் திற்குப் பயந்து அவர்களை எடுத்துக்கொண்டு வேறொரு ஊருக்குப் போகிறேன்.

திருடர்கள் :—அம்மம்மா! இக்காலத்தில் பெற்றோர்களிடம் இப்படிப் பக்தி செலுத்து கிறவர்களு முண்டா? நீயே புண்ணியவான்! நீயே கதிரொளி! வா—எங்கள் இருப்பிடத் துக்கு; உனக்கு வேண்டிய பொருள் தருகி றோம்; அதை வைத்துக்கொண்டு உன் பெற் றோரைக் காப்பாற்றிக்கொண்டு சுகமாய் இரு.

தாமோதரன் :—ஈசுவரகிருபை! அப்படியே. (அழைத்துக் கொண்டு செல்லுகிறார்கள்.)

32. "எங்கள் நாடு"

1. உலகினிற் சிறந்ததும் எங்கள் நாடு—பல
உண்மைகள் தோன்றியதும் எங்கள் நாடு

2. தத்துவங்கள் நிறைந்ததும் எங்கள் நாடு
—பல
தவசிகள் வாழ்ந்ததும் எங்கள் நாடு.

3. செந்தமிழ் சிறப்பதும் எங்கள் நாடு—
வெகு
சிவஸ்தலம் ஓங்குவதும் எங்கள் நாடு.

4. வானவர் போற்றுவதும் எங்கள் நாடு—
திரு
வள்ளுவர் பிறந்ததும் எங்கள் நாடு.

5. ஸ்ரீராமர் தோன்றியதும் எங்கள் நாடு—
[வேதச்
சிறப்பை உடையதுவும் எங்கள் நாடு.

6. சீதை உதித்ததும் எங்கள் நாடு—மிகு
சீலம் பெருகியதும் எங்கள் நாடு.

7. பைம்பொன் விளைகுவதும் எங்கள் நாடு—
[பஞ்ச
பாண்டவர்கள் ஆண்டதுவும் எங்கள் நாடு.

8. பாண்டியர் வாழ்ந்ததுவும் எங்கள் நாடு—
[பொல்லாப்
பாவம் விலக்கியதும் எங்கள் நாடு.

9. கர்ணன் பிறந்ததுவும் எங்கள் நாடு—கவிக்
கம்பன் சிறந்ததுவும் எங்கள் நாடு.

10. வேதங்கள் தோன்றியதும் எங்கள் நாடு—
[தேவ
கீதங்கள் பாடுவதும் எங்கள் நாடு.

33. உலகநீதி வாக்கியங்கள் III

1. இணங்கக் கூடாதவர். (ஐவர்)

கொலை களவு செய்வாரோடு இணங்க
வேண்டாம்.
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க
வேண்டாம்.
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க
வேண்டாம்.
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க
வேண்டாம்.

2. திரிய வேண்டாதவை. (ஏழு)

யாரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்.
குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்.
திறம் பேசிக் கலகம் இட்டுத் திரிய வேண்டாம்.
பிணைப்பட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்.
போகவிட்டுப் புறஞ்சொல்லித்திரிய வேண்டாம்.
மனஞ்சலித்துச் சிலுகிட்டுத் திரிய வேண்டாம்.
வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரிய
வேண்டாம்.

அர்த்தம் :—இணங்கக் கூடாதவர்=சேரக் கூடாதவர். கொலை=கொல்லுதல். நல்லிணக்கம்=நல்ல சகவாசம். மறம்=பாவம். புறஞ்சொல்லி=கோள் சொல்லி. வழிபறித்து =வழியில் அடித்துத் திருடி. ஊரோடு=ஊரிலுள்ள ஜனங்களோடும். குண்டுணி=காணாத இடத்தில் அவதூறு பேசுதல். பாராட்டி=மனதிலே பெரிதாகப் பாவித்து. திறம்=சாமர்த்தியம். பிணைப்பட்டு=ஒருவனுக்காகப் பொறுப்பு நின்று. போகி=போய். போகவிட்டு= ஒருவன்முன் சிநேகமாய்ப் பேசி அவனை அனுப்பிவிட்டு. சலித்து=வருத்தப்பட்டு. சிலுகு=சண்டை.

17-12-22

34. பாட்டுக் கச்சேரி

கோபாலன் வீட்டில் பாட்டுக் கச்சேரி.

கோகிலம் நன்றாய் வாசிக்கிறாள்.

கோவிந்தசாமி மீட்டுகிறார்.

மிருதங்கக்காரன்  வாசிக்கிறார்.

கோபாலதாசர் வாயால் பாடுகிறார்.

கோகுலதாசர்  வாசிக்கிறார்.

தக்ஷிணாமூர்த்தி வாசிக்கிறார்.

தருமராஜர் போடுகிறார்.

நாகராஜர் ஊதுகிறார்.

காதர் பாச்சா வாசிக்கிறார்.

பாட்டுக் கச்சேரியில் எல்லோரும் பாட்டுக் கேட்கிறார்கள்.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.

RT12/694

பால போதினி

(படங்கள் உள்ளவை)

துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்தது.

பால பாடசாலைகளின் விரிவான பாடத்திட்டத்தின்படி
ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்காக

ஸ்ரீமதி லலிதாதேவி எழுதியது

1-ம் புஸ்தகம்	அணு 2½	3-ம் புஸ்தகம்	அணு 4
2-ம் ,,	,, 3	4-ம் ,,	,, 5

5-ம் புஸ்தகம் அணு 6

கோகலே தமிழ் வாசக புத்தகங்கள்.

1-ம் புத்தகம்	அணு 2	5-ம் புத்தகம்	அணு 6
2-ம் ,,	,, 3	6-ம் ,,	,, 7
3-ம் ,,	,, 4	7-ம் ,,	,, 8
4-ம் ,,	,, 5	8-ம் ,,	,, 9

Books on General Knowledge for Use in Elementary Schools

By Mr. V. Natarajan, B.A., L.T.,

பொது அறிவு

(சித்திரப் படங்களடங்கியவை)

பூகோளம், தேக சுகாதாரம், கிராம வாழ்க்கை, தேசத்தொழில், பொதுச் சரித்திரம், தாவர நூல், பிராணி நூல், இராஜாங்க முறை முதலிய பல விஷயங்கள் இப் புஸ்தகங்களில் விளக்கப்பட்டுள்ளன. வித்தியா இலாகா அதிகாரிகள் தயாரித்த பாடத்திட்டத்தை யொட்டி எழுதப்பட்டவை. எலிமென்டரி பாடசாலை மாணுக்கர்களுக்கு அவசியமான பொது அறிவு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

முதல் புஸ்தகம் 2-வது, 3-வது வகுப்புகளுக்கு	... அணு	3
இரண்டாம் புஸ்தகம் 4-வது வகுப்புக்கு	... ,,	5
மூன்றும் புஸ்தகம் 5-வது வகுப்புக்கு	... ,,	6